பாணந்துறைச் சைவமகாசபை.

உ
முருகன் துணை.

பாணந்துறைக் கந்தரந்தாதி

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY.
BESANT NAGAR, MADRAS-90.

பண்டிதர் த. சுப்பிரமணியம்

10-3-1956.

மன்மத ஞு மாசி மாதம் 27-ம் நாள்

பாணந்துறைச் சைவமகாசபை.

உ
முருகன் துணை.

பாணந்துறைக் கந்தரந்தாதி

பண்டிதர் த. சுப்பிரமணியம்

10-3-1956.

மன்மத ஹூ மாசி மாதம் 27-ம் நாள்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டு நீதிவாஞயிருந்து இளைப்பாறி, முருக தொண்டஞகி அவன் பணியே தன் பணியாக் கொண்டு விளங்குபவரும், ஷை ஆலயத்தின் மூலகருத்தாவாக இருந்து தொண்டாற்றுபவருமாகிய முருகனடியான் திரு. ஸ்பென்சர் இராசரத்தினம் அவர்களுக்கு இந்நூலை உரிமையாக்குகின்றேன்.

—ஆசிரியன்.

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

முருகன் துணை

முகவுரை

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்திரண்டாம் ஆண்டு. அளுத்காமம் ஸஹிராக் கல்லூரியில் கடமையாற்றின காலம். விஜயதசமி நாளுக்கு முதல்நாள். வெள்ளவத்தையில் நின்றேன். அதிகாலை ஒரு எண்ணம் மனதில் உதித்தது. "பாணந்துறைக்குப் போ" இதுதான் எண்ணம். உடனே புறப்பட்டேன். வாழ்வில் முதன்முறை ஆலயத்தை அடைந்தேன்.

அறிந்தவர் ஆருமில்லை. கிணற்றில் நீராடினேன். அத்தருணம் தெரிந்தவர் ஒருவர் வந்தார். வீட்டுக்கு வரும்படி அழைத்தார். "வந்த கருமம் முடிந்ததும் வரலாகும்" என்றேன்.

சுவாமி தரிசனஞ் செய்தேன். பகல் பன்னிரண்டு மணி. எனக்கொருவிதமான மயக்கம். சிறிது நேரம் மௌனமாக இருந்தேன். "எங்கு இருக்கின்றேன்" என்னும் உணர்ச்சி இல்லை. "வந்தாயோ மைந்தா" என யாரோ அழைப்பது போல இருந்தது. சிறிது அயர்ச்சி நீங்கிலேன். கோயிற் குருக்களிடம் பென்சிலும் காகிதமும் கேட்டேன். நூலின் 1ம், 2ம். பாக்களை எழுதினேன்.

தெரிந்தவர் மறுபடியும் வந்தார். கூடிச்சென்று உண வருந்தினேன். ஆலயத்தையிட்டுச் சம்பாஷித்தார். "அந்தாதி ஒன்று இந்தக் கோயிலுக்குப் பாடினால் நல்லது" என்றார். நான் ஏதும் சொல்லவில்லை போய்விட்டேன். எல்லாம் அவன் செயல்போலும் "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" ஏனையவற்றை நாடோறும் ஒவ்வொன்றாக அதிகாலையில் நினைத்து எழுதினேன். அவ்வளவுதான்.

கல்லூரி விடுமுறை நாளொன்றில் நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் அவர்களிடம் வாசித்துக்காட்டினேன். அவர்கள்

பார்த்துத் தருவதாகக் கூறினார்கள். அந்தகனும் அந்த நேரம் பார்த்து அவர்களை அழைத்துக்கொண்டான். தந்தையின் குறையை மைந்தன் இளமுருகனார் அவர்கள் நிவிர்த்திபண்ணித் தந்தார்கள். எமது ஆசிரியர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் இதனைப் பார்த்தார்கள். 1954ம் ஆண்டு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் உற்சவ நாட்களில் அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுக்கும் காட்டினேன். உயர்திரு. சு. நடேசபிள்ளை அவர்களும் அன்புடன் பார்வையிட்டு மதிப்புரை வழங்கினார்கள். இவர்களுக்கு எனது பணிவான வணக்கமும் நன்றியும் உரியதாகுக.

முருகன் திருவருள் கொண்டு இதனை இச்சிவராத்திரி நாளில் "அவனருளாலே அவன்றாள் வணங்கி" அவன் பாத தாமரைகளில் பணிவுடன் வைத்து வணங்கி அமைகின்றேன்.

அன்பர்கள் படித்து அவன் அருள் பெறுக.

"பாக்கியவாசம்"
சித்தன்கேணி.
10-3-56.

த. சுப்பிரமணியம்.

சிறப்புப்பாயிரம்

I

யாழ்ப்பாணம் — திருநெல்வேலிச்
சைவாசிரிய கலாசாலைப் பேராசிரியர்
பண்டிதமணி

திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

வெண்பா.

பாணந் துறையுறையும் பாலவே லாயுதனைக்
காணுந் தவமுடையார் கண்டிடுக — காணகிலார்
பண்டிதனார் சுப்ர மணியம் பகர்ந்தநூல்
கொண்டிடுக ஈதே குறி.

23-4-24. சி. க.

II

உடுவில் — மகளிர் ஆங்கிலக் கல்லூரித்
தமிழ்ப் பேராசான்

பண்டிதர் சோ. இளமுருகனார் அவர்கள்

விருத்தம்

பூவேறுஞ் சினையேறிப் புத்தமுதச்
சொன்மாலை பூவை பாடத்
தேவேறு மடமயில்க ணடனமிடு
திருப்பாணந் துறையின் செவ்வேள்
தூவேறு புகழ்ச்சோலை மலர்கொண்டே
யந்தாதித் தூக்குச் செய்தான்
பாவேறும் படிவிண்ட பண்டிதசுப்
பிரமணியப் பாவ லோனே.

நவாலி. சோ. இளமுருகனார்.
23-7-54.

III

திருப்புகழமிர்தம் ஆசிரியர்

அருள்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்

வெண்பா

பந்தாதி யில்லார்வாழ் பாணந் துறைக்குகனும்
அந்தாதி யில்லாதாற் கந்தாதிச் — சிந்தாகச்
சுப்ரமணி யப்புலவன் துப்புரவாய்ச் செப்பினன்
எப்புவியும் ஏத்த இசைந்து.

IV

இலங்கைத் தபால் வானொலி அமைச்சர்

கௌரவ திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் அளித்த

மதிப்புரை

பாணந்துறையிற் புதிதாகக் கட்டப்பட்ட ஆலயத்தில் திருவருள் பாலிக்கும் முருகப்பெருமானுக்கு ஓர் அழகிய பாமாலையைப் பண்டிதர் த. சுப்பிரமணியம் அவர்கள் புனைந்து சூட்டியுள்ளார்கள்.

'பாணந்துறைக் கந்தரந்தாதி' என்ற இந்நூல் பக்தி மணம் கமழும் பெற்றிவாய்ந்தது. பண்டிதர் சுப்பிரமணியம் அவர்களின் தொண்டு முருகன் அடியார்களின் பாராட்டிற்குரியது.

கொழும்பு,
25-5-55.

சு. நடேசபிள்ளை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பாணந்துறைக் கந்தரந்தாதி

கணபதி துதி

வெண்பா

நந்து ரலைகொழிபா ணந்துறைவாய் வந்தருள்செய்
கந்தன்மே லந்தாதி தந்திடவே — யைந்துகரத்
தந்திமுகன் முந்துகனிக் கெந்தைவலம் வந்தவனின்
கந்தமலர்த் தாளிணைகள் காப்பு.

வாணி வணக்கம்

பூவி லெழுந்துவந்திப் பூவைத் தருபிரமன்
தேவி! கலைக்கிறைவி! தாயேயென் — ஞவிற்பா
ணந்துறைசேர் கந்தனுக்கோ ரந்தாதி தந்துரைக்க
என்தவமே வாரா யெழுந்து.

நூல்

வந்தெனது சிந்தைதனிற் சந்தமுஞ் சிந்துரைக்கக்
கந்தாபா ணந்துறைக் கற்பகமே — நந்தாத
உள்ளக் கருத்தூட்டி யுண்மைபரு கீந்திடுவாய்
வெள்ளை மனங்குளிர வே. (1)

வேலா யுதமே விளங்குலக தத்துவமே
மூலா கமச்சுருதி முற்றுணர்வே — மாலயனுங்
காணு மலைப்பிழம்பின் கண்மணியே கூப்பி[illegible]ழு
வேணு ணழைத்தருள்செய் வாய். (2)

வாய்ந்த வுடலம் வழுவாமுன் பல்பிணிவாய்த்
தோய்ந்து நமன்றாது தோன்றுமுன் — காய்ந்து
புரமாடி மீதாடிப் பாணந் துறைபாள்
பரமா வெனையாள்கண் பார்த்து. (3)

பாராம னீயிருந்தாற் பாரி லடிய னெனக்
காராவர் பாணந் துறையையா — தீராப்
பிறப்பை யறுத்திடவும் பெம்மானே பாழு
மிறப்பை யறுத்திடவு மிங்கு. (4)

இன்றிருந்தார் நாளைக் கிலரென்று மிவ்வுலகி
னின்று பலவு நினைந்தலைந்து — கன்றியுளம்
நாளு முனைப்போற்றி நாடிப் பதம்பணிந்தே
னேழைக் கருள்வா யினி. (5)

இகமும் பரமு மிரண்டுங் கலந்து
சுகதுக்கந் துய்ப்பிக்குந் தூ போய் — அகமகிழ்ந்திங்
குண்ணிறைந்த பேரருளா லுன்னைத் தொழுதெழுந்தேன்
கண்ணிறைந்த கற்பகமே கா. (6)

கற்பகமே ஞானக் கரும்பே தளையறுக்குஞ்
சிற்பரமே பாணந் துறைத்தேவுன் — பொற்பாதத்
தேனமுத மாந்தித் திளைத்துர்சும் மாவிருக்கு
ஞானமுதங் தாராய் நயந்து. (7)

நயவுரையில் மாதர் நயன வலையில்
வியனகையிற் கையசைப்பில் வீழ்ந்து — அயர்வேனைப்
பாச விருணீக்கிப் பாரி விளிபாள்வாய்
நேசமுட னென்னருகே நின்று. (8)

நின்று மிருந்துங் கிடந்து நடந்துமுனை
யென்று நினைந்துருகி யேங்குமெனைக் — குன்றுதொறு
மாடல் புரிந்துலகை யாட்டுவிக்குந் தேவேவிற்
பாடும் பதமெனக்குப் பண்ணு. (9)

பண்ணார் முனிவோர் பரம்பொருளிங் காரென்றுன்
தண்ணார் பதந்தொழுது தான்வினவ — விண்ணோர்த
மூவருரு மூவுலகு மும்பிறவுங் காட்டினையிக்
காவர்துணை நீயலதிங் கையா. (10)

ஐயா வுனைக்காண வாசைகொண்டு நாடோறுங்
கைதொழுது மோனங் கடைப்பிடித்தேன் — தெய்வமே
தாயுநீ தந்தைநீ யாவுநீ தற்பரனே
பேயேனைப் பார்கண் பரிந்து. (11)

பரிந்த விளமையொடு பார்செல்வ மாக்கை
தெரிந்துபுன் னீரெனவே தேர்ந்து — தெரிந்தசிந்தை
கொண்டு கிடந்து குளறி நிலைகலங்கக்
கண்டு மருளிலையோ காண். (12)

காலும் பறிந்தெனது காயம் விழுந்திடுங்கால்
வேலும் மயிலுமன்றி வேறறியேன் — சோலைவளங்
காருலவு பாணந் துறைக்கமலப் பாதமலர்ச்
சீருருவே பாடித் திகழ்ந்து. (13)

திகழுங் கபிலனக் கீரன் பரணன்
புகழு மவைசிறக்கப் போந்து — அகமகிழ்ந்து
உண்மை யுரைகாட்டிக் காட்டா துருங்கரந்த
துண்முகிலே வாராயோ சாற்று. (14)

சாற்றும் பிறப்பு நிலைகேடு தக்கபூத்
தோற்ற மதன்மாற்றத் தோனுநீ — மாற்றுயர்ந்த
பொன்னேபூம் பாணத் துறைபொலிய வந்தசெல்வ
மன்னே யருள்க மகிழ்ந்து. (15)

மகிழ்ந்து சிகண்டியெனு மாமுனிவன் மாட்டு
நெகிழ்ந்து கருணை நிறைந்து — திகழ்ந்தமத
வேழ மடக்கி விளங்குசத்தி பத்திரவுன்
றாடொழுதேன் செய்யாய் தயவு. (16)

தந்தாள் முருகா பரமன் றருகுமரா
கந்தா இறைவா கதிர்வேலா — எந்தாய்
கருவாகி யானிந்தக் காசினியில் மீண்டு
முருவாகி வாரா துவந்து. (17)

வந்து விளங்குமொரு தெய்வவரு ளல்லாம
லிந்த வுலகத்தி லேதுதுணை — கந்தாநீ
பாணத் துறையமரும் பாங்குமிது தானேயான்
காண வருவாய் கனிந்து. (18

கன்றழுதல் கண்டு கடுகிவரு மாப்போல
நின்றழுமிந் நாயேற்கு நேர்தோன்றி — யொன்றினுக்கு
மஞ்சாதே வாவென்றுன் னாதரவு செய்வதென்றோ
தஞ்சமுன் றாளிணைகள் தான். (19)

தாங்கி யொருவேடன் றன்னுருவே கொண்டுவனம்
பாங்குடனே வந்தபெரும் பாவலனி — னோங்காரந்
தன்னை யடக்குந் தமிழ்ப்புலவா தட்டழியு
மென்னை முதலடக்கா யிங்கு. (20)

இங்குளைப்போ லெந்தனக்கு யாருளரோ வுற்றதுணை
மங்குல் மதிதவழு மாளிகைகள் — தங்குபா
ணந்துறைபாய் நீக்கிமல நீங்காப் பிரமநிலை
தந்தருளாய் மைந்தனெனைத் தாங்கி (21)

தாங்கு திருத்தாளுந் தங்குகர மீராறு
மோங்கு கருணைமுக மோராறும் — பாங்குபெறுந்
தாரணியு மார்புந் தகுமுந்தி யின்னெழிலு
மாரறிவார் நீகாட்டி னல்லால். (22)

அருபுவியு நீரு மனலு மடிகாற்றும்
பெருவெளியும் பேரண்ட மெல்லாம் — முருக
வொருவனே யென்றிங் குணர வல்லார்த
மருவினைக ளேந்து மறும். (23)

அறுப்பான் வினையை யருளுவான் ஞான
மறுப்பான் பிறவி யசும்பை — யுறுப்படக்கி
போலே யிருந்து பொறிபடக்கி நாடோறும்
வேலே யெனினோடி வந்து. (24)

வந்து வருத்து மிருவினையின் மாமருந்தே
புந்திக் கினிய கொம்புத் தேனமுதே — சிந்துவளந்
தென்னிலங்கைப் பாணந் துறைசேர் செழுஞ்சுடரே
பொன்னே யருள்வாய் புகல். (25)

புகலு மவர்பிறவிப் போரழி பேர்க்கி
யகல்வா னகமளிக்கு மம்பி — யிகமதிலே
வீறு விளங்கு 'சரவணப வாய'வென்று
மாறெழுத்துங் காணீ ரமைந்து. (26)

அமைந்த புவனத் தடமலரே யாங்குட்
குன்மக் தொளிருந் தேனே குகனே — சமைந்தவருந்
தித்திப்பே செங்கரும்பே பாணாங் துறைத்திருவே
சத்திதரா தாராய் சரண். (27)

சரவணத்தி லாறுருவாச் சார்ந்தவனே தேவி
யரவணைக்க வோருருவ மாணுப் — தரணியுய
வாடுமயி லேறியுல காட்டுவிக்கு மம்பரனே
கூடுமோ வுந்தனருள் கூறு. (28)

கூறு மலையாறு கூறெழவே வேல்வாங்கி
வேறு படுத்தும் விறலோனே — மாறுபடு [கான்
மென்னிடும்பைக் குன்றுக்குன் னேர்திருக்கைவே லொரு
மன்னவனே வாங்காய் மகிழ்ந்து. (29)

மகிழ்ந்தெ னிருகணீர் மாரிபோ லானந்த
நெகிழ்ந்துள்ள நெக்குருகி நிற்கப் — புகுந்துள்
வசமாக்கிக் காணு வழிப்படுத்திப் பாகி
னிசை வாக்கித் தந்தானே ரின்பு. (30)

இன்ப மிதனையா னெவ்வா றெடுத்துரைப்பே
னன்பே யென் றேழீ யருங்கரும்பி — னின்பமுதுங்
கற்கண்டுங் கோற்றேனுங் காராப்பா லுங்கலந்த
தற்பின்னர் தங்குமின்பு தான். (31)

தானீயான் கர்ணன் தனுவறியான் வில்லிமெய்
பேணு னரிச்சந்ரன் போராசைத் — தீனன்சிங்
தாமணிதாய்க் கன்ன மிடான்தரும னென்பரிங்கு
தேமணியுன் றுணிணையா தென்றும். (32)

என்று நினைத்தாலு மெங்கன் சிவக்கருணைக்
கன்றோடி வந்துநிற்கு மக்கணத்தே — நின்று
குமரா முருகா குழகா வமர
ரமரா வருகவென் றாழ்ந்து. (33)

ஆழ்ந்து நினைந்துன் னபிராம பொற்பாதங்
தாழ்ந்து விழுந்தெழும்பித் தானிருந்து — வாழ்ந்திடவே
தாயனையா யென்றோநின் தண்ணமுதத் தின்னமுத
நாயனையேற் கீந்தருளு நாள். (34)

நாதங் கடந்தபெரு நாயகனே ஞானகலை
வேத மொழிவிளம்பு மெய்ப்புலவோய் — பூதலத்தோர்
போதப் பொருளேபா ணந்துறையியின் புண்ணியமே
யாதரவு செய்திடெனை யாண்டு. (35)

ஆண்டவ னேபுலவை யாக்கி யதிலிரண்டு
பூண்டாக்கி வைத்த புதுமையென்ன — வீண்டு
மகிழ்ந்துசில பேரிருக்க மண்டியிட்டு நின்று
நெகிழ்ந்துசில பேரிருக்க நீ. (36)

நீரி னுருவாகி நீள்பயிர்கள் வாடாமன்
மாரி பொழிந்து வளமலிந்து — வாரி
வழங்குபா ணந்துறைவாய் வந்தருளு மந்தக்
களங்கமிலாக் கந்தனெனுங் கார். (37)

கார்வண்ணன் பேர்மருகா கைவண்ணங் கால்வண்ண
மேர்வண்ணங் கண்வண்ண மெல்லாமுன் — சீர்வண்ண
மென்றறிந்தே புண்ணிறைந்த வின்புறவை யானிரந்து
நின்றுருகு வேனருளாய் நீ. (38)

நீலமயில் வாகனத்தில் நீயிவர்ந்து வேலுடனே
கோலமொடு காட்சி கொடுத்தருள்வாய் — ஞாலமதில்
வஞ்சகம னுக்கயர்ந்து வாடும்போ தோடிவந்துன்
கஞ்சமலர்ப் பாதமது காட்டி. (39)

காட்டுவித்தாற் காணேனோ கௌவிபரு மூழ்வினைதான்
வாட்டுவிக்குங் காலம் வருமுன்னே — ஆட்டுவிக்கு
மம்பலத்து ளாடுமாற் கன்றுகுரு வாகவந்த
செம்பவள மேனித் திறன். (40)

திறனறியா வேழையேன் சிந்தைதனிற் பாணந்
துறையாய் தொடர்ந்துன்றன் தூய — திறன்பாடு
மாணையெனக் கீதோ வறியேனீ தற்புதமே
ஞான நிதியே யியம்பு. (41)

இயற்கையிலே பாசங்க ளேதுமில னன்றிச்
செயற்கையிலன் யாவுமுளன் சேர்ந்தன் — மயக்கமிலன்
சுத்த சிவஞான சோதித் திருப்பழனி
யத்தனிவ னென்றே யறி. (42)

அறிவாக்கு நல்ல வருளாக்கு ஞானஞ்
செறிவாக்குஞ் செல்வமெலாஞ் சேர்க்குங் — குறியாக்கி
மேதினியிற் பாணந் துறைமேயோ னாறெழுத்தை
யோதிமட நெஞ்சமே யுய. (43)

உய்யும் வகையறியே னுண்மை நிலையறியேன்
கைகுவித்துக் கண்ணீர் கலுழ்ந்திங்கென் — னையா
முருகா வெனவலறி முன்னின்றே னென்றன்
திருவே யெனக்கொன்று செப்பு. (44)

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே பல்விதமா
மொப்பரிய நூல்பலவு மோதிடினு — மப்பனே
கொண்டுன் திருப்புகழைக் கல்லார் குவலயத்திற்
கண்டதெல்லாம் வீண்கனவே காண். (45)

காணு முலகக் கடுவினைக ணீக்கியடி
பேணும் பணியாக்கும் பேறருளாய் — ஞானக்
குழந்தாய் சுவணகுத்தன் கோதகற்றுங் கோனே
யுழந்தேற் குவந்தோ ருறுதி. (46)

உறுதுணைவர் பெற்றா ருறவினர்கள் கூடப்
பறைமுழங்கப் பாசமொடு பாயந்து — மறலியுயிர்
கொண்டுபோ மந்நாட் குலவுமயின் மீதிலுனைக்
கண்டு மகிழவருள் காண். (47)

காணரியாய் ஞானக் கடலே யுனதாடல்
நானறியே னாணத்தி னுபகனே — தாணுவே
திக்கனைத்துங் கைகுவிக்குந் தேவேபா ணந்துறையின்
பக்க லெனக்கருளும் பண்பு. (48)

பண்டறியேன் கேட்டறியேன் பாரிலுனை யென்னிதயங்
கொண்டறியேன் முத்திக் குறிபறியேன் — தொண்டறியே
னென்னை யழைத்துநீ யீயும் பணிபிதுவோ
வென்னோ வியம்பிடுவா யிங்கு. (49)

இங்குமா யங்குமா யெங்குமா யேகமாய்ப்
பொங்குமா னந்தப் பொருளாகித் — தங்கியெந்
தந்தைதாய் சுற்றந் தகவெலாந் தானாகச்
சிந்தை களித்தேன் சிறந்து (50)

சிந்தித் திருந்துன்றன் சீர்சால் வடிவேலைப்
புந்தியிற் கொண்டிங்கு போற்றிவிடி — னந்தகனார்
தூது மரும்பிணியுஞ் சொல்லவொணாத் தொந்தபந்த
மேது மணுகிடுமோ விங்கு. (51)

இங்கென் பணிகளுனக் கெவ்வளவோ வவ்வளவுந்
தங்கும் படியருளத் தானீந்துன் — செங்கமலப்
பாத மடைந்து பணிந்துசும் மாவிருக்கும்
போத நிலையருள்வ தெப்போ. (52)

போதுங் குளிர்வெப்புப் பேயிருமல் குன்மவலி
வாதங் களமாலை யிவையாதி — மோதிவரு
மெல்லாப் பகையு மெளிதிற் பொடிபடுமே
சொல்லாய்நீ வேலெனவோர் சொல். (53)

சொல்லேன் திருப்புகழைச் சூழ்ந்துவரு மைம்புலனை
வெல்லே னதிவீரன் போலாவேன் — நல்லார்
இணக்க மறியே னிருந்திங் குழலுங்
கணக்கோ ரளவில்லைக் காண். (54)

காண்பதுவு நில்லாவிக் காய நிலை நில்லா
பூண்பதுவு நில்லாவே பூதலத்தில் — தேன்பதுமப்
பூமன்றி யாப்பிரண வப்பொருடேர் பொற்பதந்தான்
சேமநிலை யாகுமெனச் செப்பு. (55)

செப்பிக் கரைந்துருகித் தேங்கியிரு கண்கணீ
ருப்பி யுபசாந்தத்துள் வீழ்ந்து — அப்பனே
யுன்னைத் துதிக்கு முடம்பாடு பெற்றுவிடி
னென்ன குறையிங் கெனக்கு. (56)

என்ன குறையிங் கெனக்குநே ரிட்டாலும்
பன்னிரண்டு கைபான் பதம்பாடி — வன்னவடி
வேலா சுருதி வழுத்தும் பெரியோயென்
றோல மிடின்வருவ னோடி. (57)

ஓடி யுழன்று உனைமறந்து பார்மீதிற்
கோடி நினைவுகளைக் கொண்டலைந்து — வாடாமற்
சேபேபா ணந்துறைச்செந் தேனே யுனைவேண்டி
மாயுந் தமியேன் மனம். (58)

மனக்கோதை நீக்கி மயிலோனே வந்து
தனக்கேதொண் டாக்கிடுவான் தாங்கி — மனமேநீ
வீணா யலைந்து விழலாகி மாயாமற்
பேணா யவன்பாதப் போது. (59)

போதும் முருகாவிப் பூவுலகிற் பட்டதினி
யேதுமிங் குன்னருளி னிங்கிகமே — வேதத்தின்
காட்சிக் கரியதெய்வக் கற்பகமே யாரணத்தின்
சாட்சியே சாவறுப்பாய் சற்று. (60)

சற்று மறிவிலினான் சார்கருணை தானுமிலேன்
உற்ற வளையெறும்பு ஊர்வதுபோற் — சுற்றியெங்கும்
பெற்றவளைக் காணாத பிள்ளைபோற் பேதலித்தேன்
சற்றிங் கெனக்கருள்செய் சார்ந்து. (61)

சார்ந்த பிறவியிதன் சாதுயரப் பாடறியே
னார்ந்த வுலகத்தி னாசையினைத் — தேர்ந்து
கொளக்கருதுங் கோழையெனைக் கொண்டடிக்கே ஞான
விளக்க முறப்பண்ணு வாய். (62)

வாயோடு கண்மூக்கு வார்செவிமெய் யாமிவைபான்
மேய வழிவிடய மேவாதே — சேயவனே
யேதமிலா வாதாரத் தாறுபடி யேறிநிற்கும்
போதநிலை தாராய் புரிந்து. (63)

போத நிலையறிந்து போற்றீரா றங்குலத்தி
னாத நிலையணுகி நானிருக்க — வேதமுதல்
வோனுந் திருமாலும் வேண்டும் பரமசிவ
ஞானக் கருந்தனமே நல்கு. (64)

நல்லியக் கோடனுனை நாடிக் குறையிரப்ப
வெல்லும் வகையுணர்த்தும் வேலவனே — சொல்லுடுப்ப
சத்திரனே சாதுபரஞ் சார்ந்திடுமு னல்கிடுவாய்
வித்தகனே ஞான விதம். (65)

விதமறி யாவுனக்கு மெய்ஞ்ஞான போத
விதங்காட்டி வேன்முருகன் வந்து — இதமளித்து
அஞ்சேலென் றுதரவு தந்துன் தளையறுப்பா
னெஞ்சமே யஞ்சா திரு. (66)

இருவினையு மும்மலமு நாற்கரண மைம்பான்
வருநுகர்ச்சிக் கட்டமற வாட்டித் — திருமுகங்க
ளாறினையுங் காட்டி யருளிப் பரமுத்திப்
பேறளிப்பான் பூம்பாதம் போற்று. (67)

போற்றுதிங் குன்பாதம் போற்றியிப் புன்குரம்பை
யேற்றுத் திரிந்திளைத்தே னெம்பெருமான் — தேற்றியெந்
தாயனையா யென்றேவுன் தண்ணமுத முண்டுவந்து [தன்
நாயனையேன் வாழ்கின்ற நாள். (68)

நாளும் வினையும் நலிவும் நவக்கிரகக்
கோளுங் கொடுங்கூற்று மென்செயுங்கொ — ருளிரண்டுஞ்
சண்முகமுந் தெங்கடம்புஞ் சத்திவடி வேன்மயிலு
மென்முகமாக் கொண்டிருக்க விங்கு. (69)

இங்கெனைப் போற்பாவி யாருளரோ வுன்னருளைப்
பங்கமறத் தந்தாற் பழுதாமோ — அங்கைதனிற்
புண்போலுலகம் பொருள்பண்டத் தோடுடம்பு
மண்போந்து மாண்டொழியா முன். (70)

முன்னாசை மண்ணாசை பின்னாசை பெண்ணாசை
பொன்னாசை யெல்லாம் பொடிபடுத்தி — புன்னாசை
கொண்டு தொழுதுபதந் தோத்திரித் தேயின்பங்
கண்டு களிக்கவருள் காண். (71)

காட்டுவது நீயே கருமப் பயனையீங்
கூட்டுவது நீயே யுளத்திருந்து — ஆட்டுவதும்
நின்செயலே யென்று நினைந்தமைந்தே னிப்பூவி
லென்செயலு மாவதுண்டோ விங்கு. (72)

உண்டிங்கு நாளு முடுத்துறங்கிப் போகசுகங்
கண்டுலக வாழ்விற் களிப்பதன்றித் — தொண்டறியேன்
நில்லாத வற்றை நிலையான தென்றுணரும்
புல்லறிவற் கெங்கே புகல். (73)

புகலேன் திருநாமம் போய்ப்பாடேன் கோயில்
திகழ்வாய்மை மூலந் தெளியே — னகவிடத்தே
கும்பிக் கிரைதேடிக் கொண்டு கிடந்தாலும்
நம்பி யிருப்பனுனை நான் (74)

நாவினாற் பாடி நயன விரு நீர்பெருக்கித்
தாவிநட மாடியுனறன் தாளிணையின் — மேவவிடா
தேனோ சகத்தி லிருத்தி யலைத்திடுவாய்
தேனே திருவருளே செப்பு. (75)

செப்பு முனதுவடி வேலை யெனதிடும்பைக்
குப்பைக் கொருகாற் குறிவைப்பாய் — எப்போதுந்
தஞ்ச மெனக்கிடந்து தாவித் தவிக்கிற னுன்
கஞ்ச மலர்ப்பதத்தைக் காண. (76)

காணும் பலசமயக் காட்சியெலா நீயாய்த்
தானே முதலாய்த் தனிநின்றாய் — யானுமிதைக்
கண்டேனிங் கெச்சமயத் தோருங்கந் தாவெனநின்
றொண்டாகி நின்றுதொழு கை. (77)

நின்று தொழுது நினைந்து நினைந்துனையே
கன்றுப் பசுப்போற் கசிந்துருகி — யென்றிறத்துக்
கொண்ணாத வெண்ணமெலா மெண்ணிமனம் புண்ணாகப்
பண்ணுமற் பாவியெனைப் பார். (78)

பாரி லுனையே பரம்பொருளென் றேந்திநக்
கீரன் துனிகடந்தான் கேளினும் — பேரார்
பொதிகை முனியும் புரையறுத்தா னின்றிருப்பேர்ப்
பதிகை தொழுது பதம். (79)

பதமிதுவே சிற்றம் பலத்தார்க்கு ஞான
மிதவுறவே செய்த விறையே — விதமறியேன்
வேண்டுங் குறைமுடித்துப் பேரின்ப வெள்ளமதில்
யாண்டு மிருக்கவரு ளீண்டு. (80)

ஈண்டுன் னடியே னிடர்களையா யோவேதக்
காண்டிகையே சூர்ப்பகையென் காசறுத்துப் — பூண்
றன்னுடனே யீராறு தாமரைப்பூக் கைகளுடன் [டுளவே
பொன்மயிலின் மீதேறிப் போந்து. (81)

போந்து கதிர்காமஞ் சந்நிதி மாவைபேர்
வாய்ந்த வுசன்நல்லூர் கந்தவனஞ் — சேர்ந்துநின்
றெத்திக்கு முத்திக் கிறையானாய் நத்தியுனைப்
பத்தியொடு நிற்கப் பணிந்து. (82)

பணிந்து நிதம்பாடின் பந்தமெலா நீங்கிக்
கனிந்தபே ரின்பசுகங் காணுமே — தணிந்தநிலைப்
போதப் பொருளானைப் பாணந் துறையுறைநால்
வேதப் பொருளானை வேண்டி. (83)

வேண்டு வடிவமெலாஞ் சூரன் விரும்பிடவே
யாண்டவனே காட்டியரு ளாண்டவனே — ஈண்டெனையு
முந்த னருகழைத்துன் வீரக்கழ லொளிருங்
கந்த மலர்ப்பதத்தைக் காட்டு. (84)

கார்வண்ணன் மாலோன் கடல்வண்ணன் றங்கைதருஞ்
சீர்வண்ணன் கந்தன் திருவடியை — நேரிருந்து
நாட்டிப் பிடித்துக்கா னன்கடக்க வல்லார்கள்
வீட்டுநெறி கண்டுதெளி வார். (85)

வார்சிலைக்கை வேடர் குலமகளும் வாரணத்தோன்
சீர்தெய்வ மாவனமுஞ் செவ்வேளும் — பார்மிதி
லிச்சைகிரி யாஞான மாயிலங்க நிற்குமது
பச்சைமயில் வாகனத்தின் பண்பு. (86)

பண்புரைக்க நானறியேன் பாணந் துறைவேலா
மண்புக்கு மாலும் பிரமனவன் — விண்புக்குங்
காணாத வீசனுக்கு ஞானவுப தேசமருள்
கோனே யெனக்கருளோர் கூறு. (87)

கூறு மெழுத்தாறுங் கொண்டு தினந்தோறு
மேறு முருவேற்றி யிங்கிருப்பின் — தேறுமுரு
வேறுந் திருவேறு முற்றவெலா மீடேறு
மாறு முகவனரு ளால். (88)

ஆல மணிமைந்த ஞாதி வராகமதாய்
ஞால மதுகிண்டோ னின்மருகன் — வேண்மயிலுந்
தார்கடம்புந் தண்சதங்கை யும்பாம்பு மென்னிதயத்
தேர் பெறவோ ரீனமிலை யிங்கு. (89)

இங்கென்னை வாட்டு மிருவினையு நேராகிப்
பொங்குங்கோள் கூற்றெல்லாம் போயொழியத் — துங்கமுட
னுள்வான் கடப்பம்பூ வண்ணலவன் பூங்குமுதத்
தாடான் துணையெனவே தாழ். (90)

தாழ்தடக்கை யைந்துமோர் தங்குமத மூன்றுமொன்றி
யூழ்வினையை யூட்டுமுய ரும்பரான் — வாழ்வித்த
கந்தனைநீ நாடோறுங் காவெனவே கூவிநிதம்
வந்தனைசெய் பந்தமறு வாய். (91)

வாய்ந்தபா ணந்துறைவாய் வந்தடியிற் சேர்ந்தோருக்
கேய்ந்த பரமுத்தி யேதந்து — தோய்ந்துழலு
மூழ்வினையை வாட்டி யுலவாத பேரின்ப
வாழ்வளிக்குஞ் சேவடியை வாழ்த்து. (92)

வாழ்வுக் கழுவேனோ தாழ்வுக் கழுவேனோ
கூழுக்க ழுவேனோ கோமானே — ஊழ்ப்பிறவி
யேழுக் கழுவேனோ வெல்லா நினைந்தழுது
பாழுக் கிறைத்தேனைப் பார். (93)

பார்புகழுஞ் சீர்புகழும் பக்குவமில் லாரளிக்கும்
பேர்புகழு மார்புகழு மேவிரும்பே — னோர்புகழு
மோங்காரத் துள்ளொளிக்குள் ளேகுகனைக் கண்டுதொழும்
நீங்காப் புகழிருக்க நெஞ்சே. (94)

நெஞ்சே புலகநெறி நின்றுமய லால்நெரியும்
வஞ்சர் தமைப்பாடி வாடாதே — யெஞ்சாத்
தவக்கொழுந்தைப் பாணந் துறைமேய வேதச்
சிவக்கொழுந்தைப் பாடுதும்வா சென்று. (95)

சென்றும் மதியாத தேசத் தலைவர்பா
லின்றிரந்து மாயாமல் நெஞ்சமே — குன்றெறிந்த
வெற்றி வடிவேல் விளங்குமுரு கன்பதத்தைப்
பற்றிப் பிடிப்பாய் பரிந்து. (96)

பரிந்து பிரணவத்துட் பாடறியாப் பூமற்
சுரந்து சிறைவிடுக்குஞ் சோதீ — புரிந்தெனது
வல்வினையை வாட்டி வழிப்படுத்தி வேதவித்தே
நல்வினையைத் தந்துரையாய் நாடி. (97)

நாடித் தினந்தோறு நைந்துருகி நெக்குள்ளம்
பாடிமுரு காபழனீ யென்றுபதம் — பாடியரும்
வேத விழுப்பொருளை மெய்ஞ்ஞான தீபத்தைப்
போதப் பொருளையே போற்று. (98)

போற்றி யுரைக்கின்றேன் பொய்யிதுவென் றெண்ணுதீர்
நாற்றிசையும் வாழ்கின்ற நம்மக்காள் — ஆற்றமருள்
கொண்டு முருகன் கூத்தாட் டயர்கின்றான்
கண்டு மகிழ்வீர் கருதி. (99)

கருதித் தொழுது கருவறுப்பீர் காணும்
சுருதி முடிவுக்குந் தோன்றாத் — திருவமுதைக்
கண்டு களித்துக் கருணை மலர்ப்பதத்தே
யுண்டினிதே நாளு முவந்து. (100)

பயன்

கட்டளைக்கலித்துறை

சிந்தா குலந்தீ வினைக ளறுந்திடு ஞானநிலை
நந்தா வளநற் கலைதிரு வோங்கிடு மாநிலத்தைத்
தந்தா டலைப்புரி பாணந் துறையரு டேக்குகந்த
ரந்தா திமாலை யனுதின மோதி யணிபவர்க்கே.

திருச்சிற்றம்பலம்.

முற்றும்.

பிழை திருத்தம்

		பிழை	திருத்தம்
34ம் செய்யுள்	1ம் வரி	நிலைந்துன்	நினைந்துன்
35ம் ,,	3ம் ,,	துறையியின்	துறையின்
39ம் ,,	2ம் ,,	கோலமெரடு	கோலமொடு
71ம் ,,	2ம் ,,	யொல்லாம்	யெல்லாம்
86ம் ,,	2ம் ,,	பார்மிதி	பார்மீதி